வகுப்பு : 10

# அலகுத் தேர்வு - 3, நவம்பர் - 2024

நேரம் : 1.30 மணி]

## தமிழ்

[மொத்த மதிப்பெண்கள் : 50

பகுதி – 1

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 6X1=6

கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் -------
(அ) அகவற்பா (ஆ) வெண்பா (இ) வஞ்சிப்பா (ஈ) கலிப்பா
2. வீட்டைத் துடைத்து சாயம் அடித்தல் இவ்வடி குறிப்பிடுவது ------
(அ) காலம் மாறுவதை (ஆ) வீட்டைத் துடைப்பதை
(இ) இடையறாது அறப்பணி செய்தலை (ஈ) வண்ணம் பூசுவதை
3. "மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்" – மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே -------
(அ) திருப்பதியும் திருத்தணியும் (ஆ) திருத்தணியும் திருப்பதியும்
(இ) திருப்பதியும் திருச்செந்தூரும் (ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்
4. "கானடை" இச்சொல்லைக் கான் அடை எனப் பிரித்துக் கிடைக்கும் சரியான பொருளைத் தேர்க.
(அ) காட்டைச் சேர்தல் (ஆ) காட்டைப் பார்த்தல்
(இ) காட்டுக்குள் நடத்தல் (ஈ) காலால் நடத்தல்

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

*"பண்டோர் கம்பன், பாரதி, தாசன்*
*சொல்லா தனசில சொல்லிட முனைவேன்!*
*புகழ்ந்தால் என்னுடல் புல்லரிக் காது*
*இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது!"*

5. பாடல் இடம் பெற்றுள்ள கவிதைத் தொகுப்பைத் தேர்க.
(அ) காற்று (ஆ) ஞானம் (இ) கனிச்சாறு (ஈ) காலக்கணிதம்
6. சீர் மோனைச் சொல்லைத் தேர்க.
(அ) பண்டோர் – தாசன் (ஆ) புகழ்ந்தால் – இகழ்ந்தால்
(இ) என்னுடல் – முனைவேன் (ஈ) புகழ்ந்தால் – புல்லரிக்காது

பகுதி – II

பிரிவு – 1

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. 3x2=6

11–வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

7. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் – சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
8. திருக்குறள் அறத்துப்பாலின் அதிகாரங்கள் இரண்டின் பெயரை எழுதுக.
9. குறிப்பு வரைக – அவையம்
10. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.
11. 'உலகு' – என முடியும் திருக்குறளை எழுதுக.

பிரிவு – 2

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. 3x2=6

12. பாடாண்திணை – குறிப்பு எழுதுக.
13. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி, எடுத்துக்காட்டுத் தருக.
14. கலைச்சொல் தருக.
அ) Guild ஆ) Revivalism

SATGURU STUDY CENTRE

SATGURU STUDY CENTRE

குறிப்பு: செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.

கீழ்க்காணும் மரபுத் தொடருக்கான பொருளினை எழுதுக.

அ) அள்ளி இறைத்தல் ஆ) ஆறப்போடுதல்

15. மயங்கிய – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

16. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.

அ) உதகமண்டலம் ஆ) புதுச்சேரி

## பகுதி – III பிரிவு – 1

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. 3X3=9

17. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

18. வாளித் தண்ணீர், சாயக் குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை – இச்சொற்களைப் பயன்படுத்தி ஒரு பத்தி அமைக்க.

19. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

20. திருக்குறளை அலகிட்டு வாய்பாடு காண்க.

செய்க பொருளைச் செறுநர் செறுக்கறுக்கும்
எஃகதனிற் கூறிய தில்.

21. 'முதல் மழை விழுந்ததும்' என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிப்பாடுகிறார்?

## பிரிவு – 2

அடிபிறழாமல் எழுதுக. 1X3=3

22. அ) "தூசும் துகிரும்" எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

(அல்லது)

ஆ) "மாற்றம் எனது" எனத் தொடங்கி "அட்சயப் பாத்திரம்" என்பது வரை உள்ள காலக்கணிதப் பாடல்.

## பகுதி – IV


எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க. 2X4=8

23. நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

24. மாணவர் பருவத்தில் நீங்கள் செய்ய வேண்டிய அறங்களையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் தனித்தனியே பட்டியலிடுக.

25. இரண்டாம் இராசராச சோழனது மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக.

26. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



## பகுதி – V

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க. 2X6=12

27. நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் "மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்" என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

28. உங்கள் ஊரில் கடின உழைப்பாளர் – சிறப்பு மிக்கவர்– போற்றத்தக்கவர் – என்ற நிலைகளில் நீங்கள் கருதுகின்ற பெண்கள் தொடர்பான செய்திகளைத் தொகுத்து எழுதுக.

குறிப்பு : பூ விற்பவர், சாலையோர உணவகம் நடத்துபவர் .........

29. உங்களைக் கவர்ந்த தலைவர் ஒருவரைப் பற்றிக் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

முன்னுரை – தமிழ்நாட்டின் தலைவர் – நாட்டுப் பற்று – மொழிப்பற்று – தொண்டுள்ளம் – எளிமை – மக்கள் பணியே மகத்தான பணி – முடிவுரை.



SATGURU STUDY CENTRE